களுக்குத் தரும்போது அதில் 30 சதவீதத்தைதான் எடுத்துக் கொண்டு, 70 சதவீதத்தைத்தான் அளிக்கிறது. அந்த 70 சதவீதத்தில் 30 சதவீதத்தை மானியமாகவும் 70 சதவீதத்தைக் கடனாகவும் தருகிறது, கடனாகத் தருகிற தொகைக்கு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி என்ற வகையில், 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தருகிறது.

ரயில் மூலம் வந்த ஸ்பிக் யூரியா மூட்டைகள்

*வினா எண் 64 திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) விழுப்புரத்தில் தமிழ்நாடு கிடங்கு வசதி கார்ப்பரேஷனுக்கு ரயிலில் வந்த ஸ்பிக் யூரியா 680 மூட்டைகள் டெலிவரி எடுக்கப்பட்டு கிடங்குக்கு வந்து சேரவில்லை என்று வழக்கு பதிவாகியுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த மேல் நடவடிக்கை விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இச்செயலுக்குக் காரணமாகஇருந்த ஏற்றி இறக்குதல் மற்றும் போக்குவரவு செய்யும் ஒப்பந்தக்காரர், திரு. ஆர். ஜோதிப்பிரகாசம் மீது காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் திரு ஜோதிப்பிரகாசத்தினை 15.12.1980-ம் நாளன்று கைது செய்து, நீதி மன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். 680 மூட்டை ஸ்பிக் யூரியாவின் கிரயமான ரூ. 68,000/- (ரூபாய் அறுபத்தெட்டாயிரம் மட்டும்) மேற்கூறிய ஒப்பந்தக்காரரிடம் வசூல் செய்து அதனை வைப்புத் தொகையாக நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டுள்ளது. வழக்கு நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் துறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற ஒழுங்கீனங்கள் மீண்டும் நிகழா வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 680 மூட்டை யூரியாவின் கிரயம் ரூ. 68,000 ரூபாயையும் கோலியனூர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர், டிரான்ஸ்போர்ட் கான்ட்ராக்டர் திரு. ஜோதிபிரகாசம் அவர்களும் அவருக்கு உடந்தையாக இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு. கிருஷ்ணன் அவர்களும், வாக்குமூலம் கொடுத்து, அதற்குப் பிறகு அந்தப் பணம் செலுத்திவிட்ட பிறகு, அங்கே உள்ள ஊழியர்களின் பேரில் புதிதாக வழக்கு திருப்பிவிடப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே' நல்லது செய்பவர்களும், கெடுதல் செய்பவர்களும் எல்லாக்கட்சி யிலும் இருக்கிறார்கள். கணக்குப் பார்த்தால் எல்லா கட்சியிலும் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருக்கக் கூடும், திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருக்கக் கூடும். அவர் யாராக இருந்தாலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு ஆகும் இது. ஆகவே அவர்கள் சொல்லுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவரையும் இந்த அரசு விட்டுவிடவில்லை என்பதும் தெரிகிறது. அவர்களை கைது செய்து வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தில் 68 ஆயிரம் ரூபாய்கள் செலுத்தப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான் இது பற்றி முடிவுக்கு வரும்.

அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது, சர்வீஸ் விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாகராஜன், தேவன் என்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு விசாரணை செய்யப் பட்டு வருகிறது. விசாரணை முடிவில் எங்கே தவறு ஏற்பட்டிருக் கிறது, அந்தத் தவறுக்கு யார் காரணம் என்று பார்த்து அவர் களுக்குத் தண்டனை வழங்குவது இந்த அரசின் நோக்கம். அந்த அடிப்படையில்தான் இந்த வழக்கு கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு கு. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அமைச்சர் சொன்னதற்கு நன்றி. இதேபோல கிடங்கு வசதிக் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், திருவண்ணாமலையில் 2,48,000 ரூபாய்களும் ராணிப்பேட்டையில் 34,000 ரூபாய்களும் மதுராந்தகத்தில் 28,000 ரூபாய்களும்—இப்படிப்பட்ட அளவில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் அதில் முழுமையாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை, அங்கே ஒழுங்கீனங்கள் நடை பெற்று, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால், அதனுடைய முழு குறிப் புகளையும் நான் தெரிவிக்கிறேன், தனிக்கேள்வி போட்டால் முழு விவரத்தையும் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்த 68 ஆயிரம் ரூபாய்களும் வைப்பு நிதியாக கோர்ட்டிலே செலுத்தப் பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், அந்தப் பணம் அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய பணம். தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியது அவசியம். ஆனால் ஏன் அந்த நிதியை அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வழக்குமன்றத்தில் இந்த வைப்புத்தொகை வைக்கபட்டிருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பிறகு, அவர்கள் எதிர் வழக்காடுகிறார்கள். அவர்கள் வழக்காடி முடிந்ததற்குப் பிறகு, நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, அந்தப் பணம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படும். நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு நாம் கட்டுப்படவேண்டும். வைப்புத் தொகையை நீதி மன்றத்தில் வைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதன் காரணமாக இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. அது அரசாங்கத்திற்கு உரிய பணம், அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம்தான்.

மணவிழாக்களில் அளிக்கப்படும் விருந்திற்கான கட்டுப்பாடு.

*வினா எண். 65 திரு ரா உமாநாத் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

மணவிழாக்களில் அறுசுவை விருந்து அளிப்பது சம்பந்தமாக நூறுபேர்களுக்கு மட்டுமே என்ற கட்டுப்பாட்டை விதிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தற்போது கட்டுப்பாடு விதிக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையானது ஐடியலிஸ்டிக்காக வந்ததல்ல. வரதட்சிணை முறைகளில் இன்று எராளமான குடும்பங்கள் போண்டியாகிக் கொண்டு வருவது நமக்கெல்லாம் தெரியும். அதேபோல சீர்வரிசைகள் என்ற பேரால் எத்தனையோ குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியும். இந்த முறை ஆரம்பக் காலத்திலே திருமணத்திற்கு வந்தவர்களுக்கு மரியாதை கொடுப்பதற்கு ஒரு பீஸ்ட் கொடுப்பது என்பது வழக்கமாக இருந்தது. ஆனால் அதுவே இப்போது ஒரு நிப்பந்தனையாக—இத்தனை ஆயிரம் பேர்களுக்கு விருந்து போட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது குறித்து 60 பேர்கள் கையெழுத்திட்டு மாதர் சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் சர்க்காரிடத்திலும், முதலமைச்சரை நேரில் சந்தித்தும் கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய என்ன குறுக்கே நிற்கிறது? அதைப் பரிசீலனை செய்யாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

[முற்பகல் 9.40]

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண விழாக்களில் விருந்து அளிப்பதில் கட்டுப்பாடு விதிக்கிற முறைகள் எற்கனவே இரண்டு, மூன்று முறைகள் இருந்தன. 1965-லிருந்து 1970 வரை தமிழகத்தில் இருந்தது. சாதாரண விருந்துகளுக்கு 50 பேரை வரவழைக்கலாம் என்றும் திருமணம் மற்றும் இறுதி சடங்கு போன்ற நேரங்களில் 200 பேரை அழைக்கலாம் என்றும் இருந்தது. சட்டம் இருந்தாலும் நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தது.